**IN THE COURT OF THE SESSIONS JUDGE, FAST TRACK MAHILA COURT, VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.**

**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**Spl. S.C. No. 01 / 2018**

**Dated : 20.07.2018**

**Deposition of witness for : P.W. 4**

| | |
|---|---|
| பெயர் - திருமதி. சுமதி | ஜாதி : |
| த / பெ - | சமயம் - |
| கிராமம் : | தொழில் - |
| தாலுகா : | வயது - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

**முதல் விசாரணை -**

நான் தற்போது சாத்தூர் மதுவிலக்குஅமல் பிரிவில் சார்பாய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 02.09.2016ம் தேதி இருக்கன்குடி காவல்நிலையத்தில் சார்பாய்வாளராக பணியிலிருந்தபோது 17.30 மணிக்கு அர்ஜீனன் மனைவி அமுதா நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று இருக்கன்குடி காவல்நிலைய குற்ற எண் 183 / 16 இதச பிரிவு 366-Aன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகார் மனுவையும் இணைத்து சாத்தூர் நீதித்துறை நடுவர் மன்றம் எண்-2ற்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை இருக்கன்குடி வட்ட ஆய்வாளர் மேல் விசாரணைக்கு வழக்கு கோப்பிலும் வைத்தேன். அமுதா கொடுத்த புகார் மனு அ.சா.ஆ 2 . முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 3 . பிறகு 10.10.2016ம் தேதி 15.00 மணிக்கு ஆய்வாளரின் உத்தரவுப்படி எனக்கு கிடைத்த தகவலின் படி காணாமல் போன சிறுமியின் புகைப்படத்துடன் சாத்தூர் பஸ் நிலையம் சென்று அங்கு நின்று கொண்டிருந்த இளையராணியையும், எதிரி திருக்குமரனையும் கண்டுபிடித்து 17.30 மணிக்கு காவல் ஆய்வாளர் முன்பு ஆஜர்படுத்தினோம். அப்போது காவல் ஆய்வாளர் கடத்தப்பட்ட சிறுமியை விசாரித்த போது நானும் உடனிருந்தேன். ஆய்வாளரின் வேண்டுகோளின் படி சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிறுமியை மருத்துவ பரிசோதனைக்காக நானும், பெண் தலைமை காவலர் 1035 திருமதி. சுப்புலட்சுமியும் கூட்டிசென்று பரிசோதனைக்கு உட்படுத்தி பரிசோதனை முடிந்தபிறகு விருதுநகரிலுள்ள காப்பகத்தில் ஒப்படைத்தோம். பிறகு கடத்தப்பட்ட சிறுமியின் பெற்றோர் மதுரை உயர்நீதிமன்ற கிளையில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்ததின் பேரில் 17.10.2016ம் தேதி சிறுமியை காப்பகத்திலிருந்து எடுத்துகொண்டு உயர்நீதிமன்றத்தில் ஆஜர் செய்தோம். அங்கு சிறுமி பெற்றோரிடம் செல்ல மறுத்துவிட்டதால் உயர்நீதிமன்ற உத்தரவுப்படி விருதுநகர்

காப்பகத்தில் ஒப்படைத்து பிறகு ஸ்ரீவில்லிபுத்தூர் மகிளா நீதிமன்றத்தில் ஆஜர்செய்தோம். பிறகு 22.10.2016ம் தேதி மகிளா நீதிமன்ற உத்தரவுப்படி குவிமுச பிரிவு 164ன் கீழ் வாக்குமூலம் பெறுவதற்கு சிறுமியை விருதுநகர் நீதித்துறை நடுவர் மன்றம் எண் - 1 ல் ஆஜர் செய்து வாக்குமூலம் பெறப்பட்டு மீண்டும் காப்பகத்தில் சிறுமியை ஒப்படைத்தோம். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை-**

நான் சொன்ன நேரத்தில் சொன்ன முறையில் முதல் தகவல் அறிக்கை தயார் செய்யப்படவில்லை என்றும் வழக்கிற்காக குறிப்பிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் கூறுவதுபோல் பாதிக்கப்பட்ட சிறுமியையும் எதிரியையும் சாத்தூர் பஸ் நிலையத்திற்கு முன்பு பார்க்கவில்லை என்றும் வழக்கிற்காக அவ்வாறு கூறுகிறேன் என்றால் சரியல்ல. ஆய்வாளர் கேட்டுகொண்டதற்கிணங்க பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

அமர்வு நீதிபதி,
விரைவு மகளிர் நீதிமன்றம்,
திருவில்லிபுத்தூர்.